...ாதனை விஷய
...ூங்கொத்து

...ாதமொருமுறை மலரும்

OFFICE OF THE REGISTRAR OF B...
6 APR 1944
MADRAS

Venkatachalam
S. 1941-43

Editor... Lourduswami, B...
Publi... ...ning School, Trichino...

...பிரல்—மே 1943

JL
ஊ211, M11PP
N43·33·1911
139986.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்.
1.	பத்திராதிபர் குறிப்புகள்	20[illegible]
2.	சென்னை கல்வி இலாகா	20[illegible]
3.	சிவிக்ஸ் பாடபோதனையின் நோக்கங்கள்	208
4.	யோசனைக்கணக்கு விடை	209
5.	விடுகவி விடை	209
6.	பாடக் குறிப்பு	210
7.	யோசனைக் கணக்கு	211
8.	"பள்ளித் திண்ணையில்"	212
9.	சிறு கதை	214
10.	பெற்றோர் சங்கங்கள்	215
11.	தாய்ப்பள்ளி பிரியாவிடை வாழ்த்து	216
12.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	218
13.	இது என்ன?	218
14.	பழைய மாணவர் சங்கம்	219
15.	கீர்த்தனை	224

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
... ...	4	0	0	7	8	0
... ...	11	0	0	20	0	0
...	20	0	0	35	0	0
...	30	[illegible]	0	55	0	0

18 APR 194

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 33] 15 ஏப்ரல்—மே 1943 [மலர் 10, 11

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பழைய மாணவர்கட்கு நன்றி:—சென்ற மாதத்தில் நம் பழைய மாணவர் ஆண்டுவிழா நடைபெற்றது. (விவரம் மற்ரோரிடத்தில் காண்க). அவ்வமயம் நம் பழைய மாணவர்கள் பலர் மனமுவந்து வந்திருந்தனர். யாம் பெரிதும் மகிழ்ச்சியுற்ரோம். அன்றியும் இவ்வருஷத்தில் முன் வருஷங்களைவிட அதிகமாய்ப் பழைய மாணவர்கள் தாய்ப் பாடசாலையின்பேரில் தமக்குள்ள அன்புக்கு அறிகுறியாகப் பல வெள்ளிப்பதக்கப் பரிசுகளையும் நன்கொடைகளையும் அளிப்பதாக வாக்குறுதி கூறியுள்ளனர். இவர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மேலும், தாய்ப் பாடசாலையின்மேல் இவர்களுக்குள்ள அன்பு மேலும் மேலும் ஓங்கி வருவதைப் பெரிதும் நாம் போற்றுகின்ரேம். அவரவர் தத்தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களாக.

இச் சந்தர்ப்பத்தில், நம் பழைய மாணவர்களிற் பலரும் ஏனைய நம் 'பூங்கொத்து' நேயர்களும் நம் பழைய மாணவர் சங்கத்தின் **ஆயுள் அங்கத்தினராகவோ** அல்லது **பரிபாலர்களாகவோ** சேராமல் வாளாவிருக்கின்றனர் என்பதைச் சற்று வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியதாய் இருக்கிறது. எனினும், அனைவரும் குறைந்தபட்சம் "பூங்கொத்து" வருடாவருட சந்தா ரூ. 1 செலுத்தி நீண்டகாலப் "பூங்கொத்தின்" சந்தாதாரர்களாக

விளங்கி வருவர் என்று நம்புகிறோம். “பூங்கொத்தின் ... னையும், தாய்ப்பாடசாலையின் ஆசிகளையும் இவர்கள் எப்பே ... பெற இறைவன் அருள்புரிவாராக.

New Admission: அடுத்த ஜூலை மாதம் இப்பாடச... யில் சேர்ந்து போதனாமுறைப் பயில விரும்புவோர் இதனடி... காணும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்டுள்ள அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) வாங்கி, அதில் குறித்துள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து, அதை மே மாதம் 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு அணா 2 வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பியே தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

2. ஷை போதனா பயிற்சிக்கு ஸெக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும் எலிமெண்டரி கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜூன் மாதம் 30-ம் தேதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின் முன் ஆஜராகி, ப்ரவேசக்கட்டணம் ரூ. 2–0–0 செலுத்தி ப்ரவேசப் பரீட்சை எழுதியபின் தெரிந்தெடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

4. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2–0–0-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, கேள்வி விடைப்பத்திரங்கள் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சேர்க்கை தினத்தன்று ரூ. 10–0–0 “டிபாசிட்” (Deposit) பணம் கட்டவேண்டியது அவசியமாகும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இங்குள்ள போர்டிங் ஹாஸ்டலில் சேர, அட்வான்ஸாக (Advance) ரூ. 10 சேர்த்துக் கட்டவேண்டும்.

7. எலிமெண்டரி கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) வழங்கப்படும்.

சென்னை கல்வி இலாகா

APR 1943

Proceedings of the D.P.I. Madras.
R.C. No. 243 B-43-dated 18-2-43

ஷை உத்திரவின்படி, ஆரம்பப்பாடசாலைகளில் சித்திரத் தையல் வேலை. (Embroidery & lace making) கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் (Industrial School Certificate) பெற்றிருந்தால் போதும். அவர்களே ஷை வேலை கற்றுக் கொடுக்கப் போதிய யோக்யதை உள்ளவர்களாவர்.

Proceedings of the D.P.I. Madras.
C. No. 678-B-43 dated 19-2-43

புதிதாய் ஸ்தாபிக்கப்படும் ஆண்பாடசாலைகளில், பெண் பிள்ளைகளின் சேர்க்கை விகிதம்: ஷை புது உத்திரவின்படி, தனியாகப் பெண் பாடசாலைகள் இல்லாத இடங்களில் ஆண் பாட்சாலைகளில் பெண் பிள்ளைகளைச் சேர்க்கும் விஷயத்தில், 1939 ௵ டிசம்பர் ௴ 15-ம் தேதிக்குப் பிறகு புதிதாக ஏற்பட்ட ஷை பாடசாலைகளில், பெண் பிள்ளைகளின் தொகை ஆங்கு படிக்கும் ஆண் பிள்ளைகளின் மொத்தத் தொகையில் பாதி கட்டாயம் இருக்கவேண்டும். பெண் பிள்ளைகளின் இந்தத் தொகையானது அப்பாடசாலையின் அங்கீகார சமயத்தில் மாத்திரமின்றி நிரந்தரமாக அடுத்துவரும் ஒவ்வொரு வருடத்திலும் இருந்தே தீரவேண்டும் என்பதே.

இதனால் ஷை தேதிக்குப் பிறகு ஏற்பட்ட ஷை பாடசாலைகளில் அப்பிரதேசத்தில் படிக்க லாயக்கான வயதுள்ள பெண் பிள்ளைகளில் 25% பள்ளியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற விதி (பூங்கொத்து 33, மலர் 6, பக்கம் 123—பார்க்க) ரத்தாகிவிட்டது.

எனவே, ஆண் பிள்ளைகளின் மொத்தத் தொகையில் பாதிக்குக் குறையாமல் பெண் பிள்ளைகளின் தொகை இருத்தல் வேண்டும் என்ற இந்த ஒரே விதிதான் ஷை புது உத்தரவில் கண்டிருக்கிறது.

தாயார் : என்டா இந்த அலாரம் கடியாரத்தைத் தொந்தரவு செய்றே.

மகன் : இல்லையம்மா. நம்ப தாத்தாதான் வலதுகால் தூங்குகிறதென்கிறார். அலாரம் வைத்தாவது எழுப்பலாம் என்றுதான்.

T. Savarirajan.

சிவிக்ஸ் பாடபோதனையின் நோக்கங்க

(P. G. S. Aiyar B.A., L.T.)

உயர்தர, கீழ்தர ஆரம்பப் பாடசாலைகளின் கலாத்திட் லுள்ள பாடங்களில் சிவிக்ஸ் பாடமானது முக்கியமானதாகக் க படுகின்றது. முதல் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை யத போதிக்கவேண்டும் எனப் பாடத்திட்டமும் வரையறுக்கின்றது. நிபந்தனைகள் ஏன் ஏற்பட்டனவென்று யோசிக்குமிடத்து இப்பாட தின் முக்யத்வமும், அதன் பிரயோஜனமும் தெளிவாகும்.

முன்பும் சிவிக்ஸ் பாடசாலைகளில் போதிக்கப்பட்டுத்தான் வந்தது. ஆனால் அப்பொழுது ஒருவரும் அதன் நோக்கத்தை அவ்வளவாகப் பாராட்டி சிரத்தையுடன் போதிக்கவில்லை. இப்பாடத்தின் மூலம் சிறுவர் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கடமைகளையறிந்து கொண்டார்களே தவிர, மேற்கொண்டு யாதொரு பலனையும் அடையவில்லை. அக்கால பாட போதனையின் நோக்கமும் குறுகியதாகவேயிருந்ததென்று சொல்லவேண்டும். கற்றவர்கள் நிர்வாகஸ்தர்களுடன் ஒத்துழைக்கவேண்டுமென்பதையே தங்கள் கருத்தாகக்கொண்டனர். (Cooperation with the administrative machinery was thought to be the end and aim of civics) இந்நோக்கத்தை சிவிக்ஸ் போதனையின் நோக்கங்களில் ஒன்றாகக் கருதலாமே தவிர, இதுதான் அப்பாடத்தின் இறுதி நோக்கம் என்று நினைப்பது தவறு.

இவ்வித தப்பபிப்பிராயம் நீங்கி தனக்குரிய ஸ்தானத்தை இப்பாடம் புதிய பாடத்திட்டத்தில் (1939) தான் பெற்றிருக்கின்றது. இப்பாடத்தின் பரந்த நோக்கங்களுக்கு ஏற்ப, பாடத்திட்டம் விரிவானதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்தின் தற்கால நோக்கம் யாதென்பதை ஆராய்வோம். சிறுவர் சட்ட உணர்ச்சியும், சமூக உணர்ச்சியும் பெற்று, தங்களது திறைத்தனத்துடன் புத்திசாலித்தனமாக ஒத்துழைக்கவேண்டும் என்பதுதான் சிவிக்ஸ் போதனையின் கருத்தாகும். சட்டங்கள், ஆரோக்கிய விதிகள் முதலியனவற்றை தண்டனைக்குப் பயந்து பின்பற்றாமல், தங்கள் கடமையென உணர்ந்து பின்பற்றவேண்டிய மனப்பான்மை ஏற்படவேண்டும். தான் சமூகத்தில் ஒரு அணு. தன் வாழ்க்கையைச் சமூக அமைப்பில் சங்கடமின்றி பொருத்திக்கொண்டு ஒவ்வொருவனும் வாழ்க்கை நடத்த வேண்டும். தமது கடமைகளையும், தமது உரிமைகளையும் ஒவ்வொருவரும் உணர வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து ஒவ்வொருவனும் தனது சுய, சமூக, அரசியல் கடமைகளை உணரவேண்டுமென்பதே இப்பாடத்தின் நோக்கமாகும். அதற்கேற்றபடியே பாடத்திட்டம் சுத்தத்தில் ஆரம்பித்து உலக சமாதானம், ஒற்றுமை என்ற பெரிய விஷயங்களில் முடிவடைகின்றது. (பாடத்திட்டத்தைப் பார்க்கவும்)

ப்பாடத்தைப் போதித்தல்மாத்திரம் போதாது. அதில் ப்படும் விஷயங்களைச் சிறுவர் நடைமுறை வாழ்க்கையில் அறுஷ் வேண்டும். (They should practise what they study civic duties) மேலும் ஆசிரியர் தன் பல்வேறு கடமைகளை ற்றுவதில் சிறுவர்களுக்கு உதாரண புருஷராக விளங்குதல் வசியம்.

யோசனைக் கணக்கு விடை

(கொத்து 33, மலர் 9, பக்கம் 190)

விடை :— தந்தையின் வயது 60; மகன் வயது 20.

இவ்விடையளித்தவர்கள் :—(1) R. Vedamuthu, Lab. Sch., Uppiliyapuram. (2) S. Arpudasamy, R. C. School, Sempet. (3) N. Mudiyappan, Teacher, R. C. St. Mary's Boys' School, Cantt., Trichy. (4) M. M. Amalraj, S. I, (5) M. Ignacimuthu, E. I. (6) A. Maria Arokiam, VII Std., R. C. Model School. (7) P. Karupannan, VI Std., R. C. Model School, Trichy. (8) S. Sebastian, Teacher, Madiampatti. (9) V. Rajagopalan, H. M. Board School, Narayanamangalam, Perembalure. (10) M. Lingiah, H. M., Kadanad, Ooty. (11) K. Srinivasan, Idoppadi. (12) M. Sandanam, H. M., Thundarayanpadi.

189986

விடுகவி விடை

(கொத்து 33, மலர் 9, பக்கம் 190)

விடைகள் :—(1) கண்கள், விரல்கள், நாக்கு, பற்கள். (2) வெங்காயம். (3) குன்றிமணி. இவ்விடைகள் அளித்தவர்கள் : R. Vedamuthu, S. Arpudasamy, M. Ignacimuthu, E. I., R. Arulsusai Gnanu, E. I., J. Selvaraj (R. C. Model School), P. Karuppannan (R. C. Mod. Sch.), S. Sebastian, Teacher. V. Rajagopalan, H. M. K. Srinivasan, Idoppadi. M. Sandanam.

குறிப்பு :—யோசனைக் கணக்கு, விடுகதை இவற்றின் விடைகள் அம்மாதத்தின் 25-ம் தேதிக்குள் நமது காரியாலயத்திற்கு வந்துசேராவிடில் அவை பிரசுரிக்கப்படமாட்டா.

பாடக் குறிப்பு

பாடம்: கணிதம். **வகுப்பு: I. நோக்கம்: 10** என்ற
ணின், எண்மானம், எண்குறிப்பு, சேர்க்கையைப்பற்றி போதித

உபகரணங்கள்: எண் படங்கள், எண் அட்டைகள், குச்சிக
விதைகள் முதலியன.

முறை: 9 குச்சிகளடங்கிய கட்டு ஒன்றைச் செய்து "இதில் எத்தனை குச்சிகள்?" என்று கேட்டபிறகு, தனியாக ஒரு குச்சியை எடுக்கச்செய்து 9 குச்சிகள் கொண்ட கட்டோடு 1 தனிக்குச்சியைச் சேர்த்தால் 10 குச்சியென்பதை அதாவது உச்சரிப்பைக் கண்டுகொள்ளும்படி க. ப. வில் எண்மானத்தில் எழுதிக்காட்டவும். மற்ற உபகரணங்களிலும் 10 எண்ணி எடுக்கச்செய்து, பத்து என உச்சரிப்பதில் தகுந்த பயிற்சி அளித்து 10-ன் எண்மானத்தை நன்கு அறியச்செய்க.

10 குச்சிகள் கொண்ட கட்டைக் காட்டி வினவுகையில் 10 என்ற எண் பெரிதாக எழுதப்பட்ட அட்டையைக் காண்பித்து, ஒரே ஸ்தானத்தில் காட்டக்கூடிய எண்ணில் பெரியது 9; சிறியது 1 என்பதைக் காட்டவும். ஒன்றுமில்லை என்பதைக் காட்டும் அடையாளம் சுன்னமே (0). பத்து என்னும் எண்ணைக் குறிக்கும்படியான ஒற்றை இலக்கம் கிடையாது. ஆகையால் 1ஐ திரும்பவும் உபயோகித்து அதை "1 பத்து" எனச் சொல்லி, அதை க. ப. வில் எழுதி 10-ன் எண் குறிப்பை அறியச்செய்க. இதற்கு 1 பத்தும் வேறொன்றுமில்லை என்று அர்த்தம் என்பதை விளக்குக. 10-ன் சேர்க்கையைப் போதிக்க 10 புளியங்கொட்டைகளை எடுத்து, தரையில் வைத்து அவைகளை சமமான 2 வரிசைகள், சமமில்லா 2 வரிசைகள், 3 பங்கு, 4 பங்கு இன்னும் வேறு என்னென்னவிதமாய் வைக்கக்கூடுமோ அத்தனை விதமாயெல்லாம் வைத்து ஒவ்வொரு வகையையும் எண்ணிப்பார்த்துப் பின், எழுதிக் காட்டுக.

அப்பியாசம்:

1. உங்கள் சிலேட்டில் பத்துப் புள்ளிகள் போட்டுக் காட்டுங்கள்.
2. உங்கள் இரண்டு கைகளில் எத்தனை விரல்கள்?
3. பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் ஒரு காலி நெருப்புப்பெட்டி கொடுத்து அதில் 10 புளியங்கொட்டைகளை எண்ணிப்போடச்செய்க.
4. பல எண்கள் கலந்த சீட்டுக் குவியலிலிருந்து 10 என எழுதப்பட்ட அட்டைச்சீட்டைப் பிரித்தெடுக்கச்செய்க.
5. 10 புள்ளியிட்ட அட்டையுடன் 10 இட்ட அட்டையைச் சேர்க்கிறது.

10 உருவம் உள்ள கார்டை 10 எழுதிய கவருக்குள் நுழைக்

7. 10ஐ எழுத்தாலும் இலக்கத்தாலும் எழுதச்செய்க.

8. (a) 5-ம் 5-ம் எத்தனை?

(b) 4-ம் 3-ம் 3-ம் எவ்வளவு?

(c) ஐந்துபேருக்கு இரண்டிரண்டு மிட்டாய்களாகக் கொடுக்க எத்தனை மிட்டாய்கள் வேண்டும்?

க. ப. சு. **10.** பத்து. $5+5=10$; $9+1=10$; $8+2=10$; $7+3=10$; $6+4=10$; $4+4+2=10$; $4+3+3=10$; $5+4+1=10$; $6+2+2=10$; $3+3+3+1=10$; $2+2+2+2+2=10$.

யோசனைக் கணக்கு

ஒரு நகை வியாபாரி தன்னிடமுள்ள வைரக் கற்களை ஒன்று ரூ. 4 வீதம் மதிப்புப் போட்டு, அவற்றுள் $\frac{1}{2}$ பாகத்தை ஒன்று ரூ. $3\frac{3}{4}$ வீதமும், மீதியில் பாதியை ஒன்று ரூ. $4\frac{1}{4}$ வீதமும் மிகுந்த பாகத்தை ஒன்று ரூ. $5\frac{1}{2}$ வீதமும் விற்றதினால் தான் மதிப்புப் போட்டதற்குமேல் ரூ. $92\frac{1}{2}$ லாபம் கிடைத்ததென்றால், அவனிடமிருந்த கற்கள் எத்தனை?

A. சவரிமுத்துப் பிள்ளை,

H. M., போர்டு ஸ்கூல், திருப்பயர்—பெரம்பலூர்.

தையல்காரன்: குழந்தை! மாதிரித் துணி கொண்டுவரச் சொன்னாரே உன் அப்பா, என்ன கலர், எந்த மாதிரி துணி என்று அவர் சொல்லவில்லையா?

செல்லமுத்து: எந்த நிறம் எந்த மாதிரியானாலும் பரவாயில்லை. விளக்குத் தொடைப்பதற்குத்தானே!

M. Antonisamy, H. M.,
Annamangalam.

"பள்ளித் திண்ணையில்"

(கொத்து 33, மலர் 9, பக்கம் 200-ன் தொடர்ச்சி)

(N. R. திருவேங்கடம், L.F.H.E. School, Megalathur)

2. ஆசிரியர் பெற்றோர் ஒத்துழைப்பு

எங்கள் பள்ளியில் பெற்றோர் சங்க ஆண்டு விழா. அது முடிந்தது. ஆசிரியர் அசந்து உட்கார்ந்திருக்கிறார். கிராம வாசிகள் சிலர் வருகிறார்கள். உரையாடல் ஆரம்பமாகிறது.

ஆசிரியர் :—வணக்கம், வணக்கம். எல்லோரும் வரவேண்டும். விழா முடிந்தாவது வந்தீர்களே. அந்த மட்டிலும் சந்தோஷம்.

நாயக்கர் :—விழாவா? என்ன சார், பிரமாத விழா? உங்கள் பள்ளிக்கூடத்தில் ஏதாவது கொண்டாடினால் நாங்கள் எதற்கு வர வேண்டும்? நாங்கள் என்ன சிறு பிள்ளைகளா?

முத்துக்கோனார் :—கொண்டாட்டமா? என்ன கொண்டாட்டம்? எங்கே? எப்பொழுது? எதற்காக? ஒன்றும் விளங்கவில்லையே.

ராஜா முத்துராஜா :—என்ன ஓய்! இது தெரியலையா? பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் வந்து நம்மை எல்லாம் கூப்பிட வரலையா? என்னமோ, பெற்றோர் சங்கமாம், மகா கற்றோர் சங்கம்—இதற்கு வரலையே என்று வாத்தியார் கிண்டல் செய்கிறார்.

ஆசி. :—பெரியோர்களே! உங்கள் வாதம் விசித்திரமாகவல்லவா இருக்கிறது? நாய்க்கர் என்ன பிரமாதம் என்கிறார். எந்தக் காரியத்தையும் ஒரு துச்சமாக மதிக்கும்வரை நம் நாடு குட்டிச்சுவர் தான். கொண்டாட்டம் சிறுவர்களுக்குத்தான். அவர்களோடு ஆசிரியரும் பெற்றோரும் கலந்துகொள்வது அவர்களுக்கு இன்னும் கொண்டாட்டமல்லவா? மேலும் பெற்றோர் சங்கம் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோராகிய உங்களுக்காகவல்லவா கூட்டப்படுகிறது? பெற்றோர் சங்கத்திற்கு பெற்றோர்கள் அவசியம் வரவேண்டுமென்பது உங்களுக்குப் படவில்லையா?

மு. கோனார் :—உங்களுக்குத்தான் பிள்ளைகளை மேய்ப்பதைத் தவிர வேறு வேலையில்லை. எங்களுக்குமா சார் வேலையில்லை?

ரா. மு. ராஜா :—வேலை கிடக்கட்டும். இங்கே வந்து நாம் என்ன செய்யப்போகிறோம்?

நாயக்கர் :—இதென்ன பேச்சு! வேலையில்லாமலா வாத்தியார் கூப்பிடுவார்? வாத்தியார் சார்! பெற்றோர் சங்கம் எதற்காகக் கூட்டுகிறீர்கள்?

ஆசி. :—நாயக்கரே! இது சரியான கேள்வி. சொல்கிறேன் கேளுங்கள். பெற்றோர் சங்கமென்பது பெற்றோர் ஆசிரியரிடையே

ன்னியோன்னியத்தை ஏற்படுத்தும்பொருட்டும், பெற்றோர்கள் களின் கல்விவிஷயத்தில் எங்களைப்போலவே சிரத்தை காட்டும் செய்யவும் கூட்டப்படுகிறது.

கோனார்:—வாத்தியார் சார்! பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் னால் எப்படி அன்னியோன்னியம் ஏற்படும்?

ஆசி:—கோனாரே! இதுவும் நல்ல கேள்விதான். பெற்றோர் ங்கங்கள் கூட்டப்படுவதன் மூலம் முதலில் நானும் நீங்களும் சந்திக்க ஒரு வழி ஏற்படுகிறது. இக்கூட்டத்தில் பெற்றோர்களாகிய உங்களில் ஒருவரைத் தலைவராக்குவதன்மூலம் உங்களுக்கும் பள்ளிக்கூட முன் னேற்றத்தில் பங்குண்டு என்பதை எங்களை அறியாமலே உங்களை உணரச்செய்கிறது. இக்கூட்டத்திற்கு நீங்கள் வருவதன்மூலம் உண்மையில் நாங்கள் பிள்ளைகள் கல்வியில் எவ்வளவு சிரத்தை எடுத் திருக்கிறோம் என்பதை நீங்கள் ஒருவாறு அறியலாம். உபாத்தியாய ரின் உழைப்பை உள்ளபடி நீங்கள் உணரும்போது எங்களுக்கும் உங்களுக்கும் இடையே ஒருவித மன ஒற்றுமை ஏற்படுகிறது. அது தான் 'பிள்ளைகள் கல்வியில் சிரத்தை காட்டுதல்,' 'பிள்ளைகளை சரிவர பள்ளிக்கனுப்புதல்,' 'கிராம அபிவிர்த்தி' முதலிய செயல்களில் நம் மிருவரையும் பரஸ்பர ஒற்றுமையுடன் உழைக்கச்செய்கிறது.

ரா. மு. ராஜா:—அடேயப்பா! ஒரு குட்டி 'லெக்சரே, செய்து விட்டீர்களே! சரி சார், எங்களுக்கு இதில் என்ன உற்சாகம் இருக்கிறது?

ஆசி:—ஏன்? உற்சாகத்திற்கு என்ன குறைவு? நாங்களும் உங் கள் பிள்ளைகளும் 'விடாக்கண்டனாக' இருந்து உங்களை பன்முறை அழைப்பதிலேயே நீங்கள் அதைத் தட்டிக் கழிக்கமுடியாமல் வருகி றீர்கள். அப்படி வரும்போதே கொஞ்சம் சிரத்தையும் தானாகவே ஏற்படும். மற்றும் இங்கு நடத்தப்படும் சொற்பொழிவுகளாலும் எவ்வளவோ உற்சாகமடைகிறீர்கள். உங்கள் பிள்ளைகளைக்கொண்டே சிறு சம்பாஷணைகள், சிறு நாடகக் காட்சிகள், கோலாட்டம், பாட்டு முதலியவற்றை இக்கூட்டங்களில் நடத்தும்போது உண்மையில் பாடி ஆடும்பிள்ளைகளைவிட நீங்கள் புளகாங்கிதமடைவது மெய்யே. இதை யார் மறுக்கமுடியும்?

நாயக்கர்:—வாத்தியார் சார்! உங்களுக்கு கோடி புண்ணியம் உங்கள் ஊக்கம், உழைப்பு இவைகளை அறியாமல் இவ்விதம் னோம். இப்பொழுது எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவி எல்லோரும் தவறாமல் இப்படிப்பட்ட கூட்டங்க றோம். சரி, சார், நாழியாகிறது. பிறகு பே

சிறு கதை

அடவி நகரில் அபாயச்சங்கு

(எஸ். இ. அருள்ராஜ்)

மாலை நேரம். வகுப்புமுடிய சிறிது நேரம் இருக்கிறது. "கி... குக் காட்டான்கள் நம்மீது குண்டுபோட யத்தனித்திருக்கிறார்க... ஆகவே நம் பள்ளியில் உள்ள மாணவர்களுக்கும் மற்ற இடங்களி... பழக்குவதுபோல் சங்கு ஊதிப் பழக்கவேண்டும்" என்றார் மிஸ்டர் யானை உபாத்தியாயர். ரொம்பச்சரி! சங்கு ஊதுவதற்கு இருக்கிறான் பலே மாஸ்டர் நரியாண்டி என்று அரங்கனைப்போலிருந்த முயல் கூறிற்று. அச்சமயத்தில் ஏ. ஆர். பி.-களை அனுப்பவேண்டுமே? யோசனை? என்றார் யானை உபாத்தியாயர். இரவில் பூனைக்குத்தான் கண் நன்றாய்த் தெரியும்; ஆகவே நம காட்டுப்பூனைகளை ஏ. ஆர். பி.-க்கு அனுப்பலாமே என்றான் குறும்புக்காரக் குரங்கையன். அதுவே சரி என்றார் யானை உபாத்தியாயர். அடவி முழுவதும் அன்று, அதிசய ஆர்ப்பாட்டம்.

இரவு மணி 7½ இருக்கும். ஹாஸ்டலில் சாப்பாட்டுநேரம். வார்டனுமான மிஸ்டர் யானை உபாத்தியாயர் ஒரு ஜோலியாய்த் தன் அறைக்குப் போய்விட்டார். மாஸ்டர் குரங்கையனுக்கு ஓர் யோசனை. சமயம் இதுவே என்று குட்டிச்சேஷ்டையை அவிழ்த்துவிட்டான். திடீரென்று அணைத்தான் விளக்குகளை. ஒரே இருட்டு.

உத்தியோகத்தைப் பெற்றவர்கள் சும்மாவாயிருப்பார்கள்? ஊ... ஊவென ஊளையிட்டனர் நரியாண்டிகள். ஏ. ஆர். பி. காட்டுப்பூனைகளுக்குச் சொல்லவாவேண்டும்; மியா...மியா...வென்று உரக்கக் கத்திச் சப்தத்தை அடக்கிக் குப்புறப் படுக்கச்செய்தனர். கனவிலும் காணாத இக்காட்டு மாணவர்கள் கேட்கவாசெய்தனர்? கத்து கத்தெனக் கத்தித்தீர்த்தனர்; துள்ளு துள்ளெனத் துள்ளிக்குதித்தனர். ஊளையின் சப்தம் காதை ஊடுறுவிச் சென்றது. மிஸ்டர் யானை உபாத்தியாயருக்கு கலவரையின் சப்தம் காதை அடைத்தது. கன வேகமாய் ஓடிவந்தார் சாப்பாட்டறை நோக்கி. ஏ. ஆர். பி.-க்கு அடங்கிக் கதவு வாசலின்முன் குப்புறப் படுத்துக்கிடந்தான் காண்டா மிருக பூபதி. தடபுடலாய் கீழே பாராது நுழைந்தார் அவ்விருட்...க்குள். காண்டாமிருக பூபதியைத் தட்டித் தொப்பென்று ... சாப்பாட்டறைக்குள். விழுந்தது குண்டு என்றது வாய் ...ல்பிள்ளை. விளக்கைப்போட்டான் குரங்கையன். ... மெல்லத் திறந்துபார்த்தன. எப்படி இருந் ...ாச் சிரிப்பு!!

பெற்றோர் சங்கங்கள்

189986

முசிரி தாலூகா மேட்டுப்பாளயம் போர்டு பாடசாலை பெற்றோர் ஆரம்பவிழா 8-2-'43-ல் மிராசுதார் ஸ்ரீ ராமய்யா அவர்களால் ந்துவைக்கப்பட்டது. ஆண், பெண் பாலர்கள் சுமார் 300 பேர் ழுமியிருந்தனர். தலைவரது சொற்பொழிவிற்குப் பிறகு ஆடல் ாடல்கள் நிகழ்ந்தன. வந்தனோபசாரத்தோடு விழா இனிது நிறை வேறியது.

—D. K. அனந்தநாராயணன், காரியதரிசி.

நத்தம்பட்டி R. C. பாடசாலை சுகாதார வாரக் கொண்டாட்டமும், பெற்றோர் சங்கமும். இவ் வைபவம் 9-2-'43-ல் வெகு விமரிசையுடன் ஸ்ரீ F. X. சிலுவைமுத்துப் பிள்ளையவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பலரால் அரிய சம்பாஷணைகளும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. கிராம சுகாதாரத்தைப்பற்றித் தலைவர் பேருரை கூறியவுடன் வந்தன உபசாரங்களோடு விழா நிறைவெய்தியது.

—C. Michael Pillai, H. M.

உடையார்பாளயம் தாலூகா எல்லாபுரம் பெற்றோர் சங்க விழா 18-2-'43-ல் திரு. சி. தொப்பையன் அவர்களது தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆசிரியர் V. பிச்சைமுத்து "ஒற்றுமை" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர். தலைவரது முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

—V. பிச்சைமுத்து, H. M., காரியதரிசி.

திருச்சங்கோடு எடப்பாடி ஹிந்து ஆண்பாடசாலையில் ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு நிறை விழா 20-2-43-ல் சேலம் ஜில்லா கல்வித் தலைவர் ஸ்ரீ V. நடராஜன், B.A., L.T., அவர்களது அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. தலைவரவர்கள் ஆசிரியர்களின் கடமைகளைப்பற்றியும், மாணவர்களது ஒழுக்கம், சுகாதாரம் முதலியவற்றைப் பற்றியும் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். வந்தனோபசாரங்கள் கூறப்பட்டதோடு விழா இனிது கலைந்தது.

—T. Sivarama Sastry, *Secretary*.

உடையார்பாளயம் திருமழவாடி லேபர் பாடசாலை பெற்றோ
சங்கம் 22-2-43-ல் அரியலூர் ஸீனியர் டெப்யூடி இன்ஸ்பெக்
K. R. ராமலிங்கம் அய்யர் அவர்களது தலைமையின்
கிராமக் கல்வி, கிராம சுகாதாரம் இவ்விஷயங்களை
இனிய சொற்பொழிவாற்றினர். தலைவரது
தனோபசாரங்கள் கூறப்பட்டு கூட்டம்

மேட்டுப்பாளையம்: போர்டு ஆசிரியை சங்க ஆண்டு ஆசிரியர் ஸ்ரீ M. S. பால் அவர்களது தலைமையின்கீழ் ஷ 28—2—43-ல் கொண்டாடப்பட்டது. மாணவிகள் கும்மி கோ டம் முதலிய நிகழ்ச்சிகளால் அனைவரையும் மகிழ்வித்தனர். த பூகோள சாஸ்திரத்தின் உயர்வு, உபயோகங்களைப்பற்றிச் சொற்பெ வாற்றினர். சிற்றுண்டி, வந்தனோபசாரங்களுடன் கொண்டாட் முடிவுற்றது.

A. Margaret,
Secretary.

தாய்ப்பள்ளி பிரியாவிடை வாழ்த்து
(T. Alangaram)

திருக்குடும்பப் பள்ளியே! திருக்குடும்பப் பள்ளியே!
ஆசிரிய மாணவர் பயிலும் பள்ளியே!
என்னே உந்தன் எழில்மிகு பெருமை!
எக்காலத்தும் சிறப்புடைத்தாமே.
ஆசிரியர் கூட்டம் ஆர்வுடன் கத்திடப்
புரிந்தனைப் பற்பல புகழ்பெறும் உதவிகள்;
உன்னிடம் பயின்ற உத்தம ஆசிரியர்
உன்னத நிலையை உன்ன உன்ன
எங்கள் மனத்தில் எம்மை அறியா
தெள்ளுறு நன்றி எழுகிற தம்ம.
உன்னிடம் கற்றேரும்; உன்றன் பெருமை
இறக்கும் அளவெம் மிதயத் திருக்கும்!
பள்ளி ஆசிரியர் பண்புடன் புகட்டிய
பற்பல நீதிகள் பாங்குடன் வாழ்வில்
உற்ற துணையாய் உதவப் பார்ப்போம்
...ிய சாந்தம் அடக்கம் பொறுமை,
...கும் கடவுள் அன்புடன்,
...விருப்பம் பெற்றும்;
...ஷையும்,

கணித சாத்திரம் களிப்புறு சரித்திரம்,
பூகோள சாத்திரம் புனித விஞ்ஞானம்,
முதலிய போதனு முறைகளை நன்கு
முறையுடன் உன்னிடம் முனிவிலா தறிந்தோம்.
சித்திரம் முதலாம் கைத்தொழில் யாவும்
சிந்தை மகிழச் சிறப்புறக் கற்ருேம்.
மாணவர் மனதை அறியும் மனநூல்,
பாடசாலை பரிபாலன நிர்வாகம்,
இன்னும் இதர இகபர கல்வியும்
பண்புடன் கற்கும் பாக்கியம் பெற்ருேம்.
கற்றுத்தந்த கனிவுடை ஆசிரியர்
பெருந்தகை மக்களின் பெருங்குணம் உன்ன
எளியேம் உளத்தில் இன்பம் பெருகிடும்;.
செய்நன்றியறியும் சிறப்புறு தன்மை
மறவோம் யாமே! மறவோம் யாமே!
உன்னை நாங்கள் பிரியவிருப்பது,
உடல்விட் டாவி பிரிவது போலாம்.
எம்முடல் உன்னைப் பிரிய நேரினும்
எம்மனம் என்றும் உனைவிட்டகலா,
போதனு விஷயப் பூங்கொத்து மூலம்
எங்கள் தொடர்பு என்றும் இருக்கும்.
தலைமை ஆசான் தகவுடை அண்ணல்
உன்னை மிக்கப் பரிவுடன் திருத்தி,
நினக்கு நல்லுதவி நேரிலாதாற்றி,
உன்னை முன்னிலை உயர்ந்திடச் செய்வர்.
எங்கள் தலைவர் குரு லூர்து சுவாமி
உன்னிடமிருக்க உனக்கென் குறைகாண்?
மாண்புடன் எங்கள் மாபெருஞ் சாலையே
வாழி! வாழி!! நீடு வாழியே!!!

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

பழைய மாணவர் சங்கம். நம் பாடசாலைப் பழைய மா[...] சங்கத்தின் ஆண்டுவிழாவும் பிரிவுபசாரமும் 3-3-43-ல் நடைபெற்[...] இதனடியில் விவரம் காண்க.

T. S. L. C. பரீட்சை 15-3-43 முதல் 18-3-43 முடிய நான்[...] தினங்களில் நம் பாடசாலை ஸெண்டரில் நடைபெறலாயிற்று. நட பாடசாலை மாணவர்களும் திருச்சி அரசாங்க போதனுமுறைப் பாட சாலை மாணயர்களும் சேர்ந்து சுமார் 200 பேர் பரீட்சை எழுதினர். வழக்கம்போல் நம் பாடசாலைத் தலைமை ஆசிரியர், Chief Superintendent ஆக இருந்து வெகு நேர்மையுடன் பரீட்சையை நடத்தி வைத்தனர்.

31-3-'43. இன்று நம் மாதிரி பாடசாலை குருளையர் (cubs) எலமனூருக்குச் சென்று விசேஷ பயிற்சி பெற்றுத் திரும்பினர்.

முதல் வருஷ முடிவுப் பரீட்சை நம் பாடசாலை, ஸெக்கண்டரி, எலிமெண்டரி கிரேடு முதல் வருஷ மாணவர்கட்கு 5-4-43 முதல் 7-4-43 வரை ஷை பரீட்சை நடத்தப்பட்டவுடன் கோடை விடுமுறை விடப்பட்டது.

விடுகவிகள்—இது என்ன ?

1. சிறு சிறு கதவு, சிங்காரக்கதவு, பூட்டத் திறக்க அசைந்த கதவு. 2. எலும்பில்லாத மனிதன் கணுவில்லாத மரத்தில் ஏறுகிறுன்.

—V. P. Natesan, Teacher, Kottanatham.

3. ஓடும் ஓடும் சங்கிலி, உருண்டோடும் சங்கிலி, பள்ளத்தைக் கண்டால் பதுங்கியோடும் சங்கிலி. —R. Arulsusai Gnanu.

4. மூன்றெழுத்தாலாகிய சொல், ஊரின் பெயராகும். முதல் இரண்டும் சேர்க்கின் காடுவாழ் மிருகத்தின் பெயர். இடை [...]ண்டும் சேர்ந்தால் அன்னிய நாட்டு மன்னன் பெயர். [...]ண்டும் சேர மானிடரின் செல்வம் குன்றச்செய்யும்

—R. Vedamuthu, Uppiliyapuram.

பழைய மாணவர் சங்கம்

திருச்சி திருக்குடும்ப போதனுமுறைப் பாடசாலை பழைய மாணவர் சங்க ஆண்டு விழா

மேற்படி விழா 3-3-43 புதன்கிழமை மாலை 5-மணிக்கு திருச்சி பள்ளி ரேஞ்சு சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆர். லக்ஷ்மண யயர், பி. ஏ., எல்.டி., அவர்களது தலைமையின்கீழ் எம் பாடசாலை பாமண்டபத்தில் வெகு குதூகலத்துடன் நடைபெறலாயிற்று.

மேற்படி வைபவம் கடவுள் வணக்கத்தோடு தொடங்க, எம் பாடசாலை தலைமையாசிரியரும், எம் சங்கத் தலைவருமான சங்கைக்குரிய ஏ. லூர்துசாமி, பி.ஏ., எல்.டி., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள்.

சபா நாயகருக்கு மாலை சூட்டியபின்னர், தேனீர் விருந்து அவ்வமயம் குழுமியிருந்த சுமார் 300 பேருக்கு அளிக்கப்பட்டது.

பழைய மாணவர்களும், புதிய மாணவர்களும் பிரிவு உபசாரச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியபின், ஆசிரியர்களின் சார்பாக, ஆசிரியர் ஸ்ரீ கணபதி அய்யரவர்கள் பாடசாலையை விட்டு வெளிச்செல்லும் மாணவர்கட்கு ஆசி கூறினர். பின்னர், நம் பழைய மாணவர் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்துவருபவரும் நம் சங்க பொக்கிஷதாருமாகிய திரு. Y. சூசைமாணிக்கம் அவர்கள், தாய்பாடசாலைமட்டில் பழைய மாணவர்கள் அனைவரும் அன்புபாலித்துவருவதுடன் நம் போதனு விஷயப் பூங்கோத்தின் சந்தாதார்களாகவே எப்பொழுதும் இருந்து வருவதே சாலச் சிறந்த பணியாகும் என்றும் இன்னும் புதிய சந்தாதார்களைச் சேர்த்தும் விஷயதானங்கள் புரிந்தும் வரவேண்டுமென வெகு திறமையாகப் பேசி முடித்தனர்.

சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஆர். பிச்சைப் பிள்ளை அவர்களால் வருடாந்தர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

பின்னர், அவைத்தலைவர், அவ்வமயம் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் முதன்மையில் தேர்ந்த ஸ்ரீ ஏ. ஸ்தனிஸ்லாஸ் என்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், சாரணர்களுள் முதல்தரமான ஐ. அந்தோனி என்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், ஏனைய சாரணர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்களும் வழங்கினார்.

தலைவர் கடைசியில் பலத்த கரகோஷத்தினிடை எழுந்து இந்த விழாவிற்கு தலைமை வகிக்குமாறு கேட்டுக்... வைபவத்தில் கலந்துகொள்ளும்படி சந்தர்ப்பம் ... கூறி, வெளியேறும் ஆசிரியர் தத்தம் கட... செவ்வனே புரிந்து தம் சமூகத்... தொண்டாற்றிவரவேண்டுமெ...

பின்னர் எம் சங்கத் தலைவர் சங்கைக்குரிய சுவாமிகள்
போகும் மாணவர்களுக்கு புத்திமதிகளைச் சொல்லி, ஆசி கூ,
நாயகருக்குச் சங்கத்தின் சார்பாகத் தமது நன்றியறிதலைத் தெ
துக்கொண்டனர்.

இறுதியாய், சங்கக் காரியதரிசியவர்கள் அனைவருக்கும் வந்
ப்சாரங் கூற, சங்க ஆண்டுவிழா முடிவெய்தியது.

பழைய மாணவர் சங்கக் காரியக் கூட்டம்

8-3-43 திங்கட்கிழமையன்று எம் பாடசாலையில் நிகழ்ந்த காரியக் கூட்டத்தில் நம் பழைய மாணவர்களில் பலர் வெள்ளிப் பதக்கப் பரிசுகள் அளிப்பதாக வாக்குறுதி செய்தனர். விபரம் பின்வருமாறு: Y. K. மகாதேவன் (E. 2) என்பவர் சர்க்கார் பரீக்ஷையில் முதல் தரமாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு வெளி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், N. S. ரெங்கநாதன் (E. 2) என்பவர் சர்க்கார் பரீக்ஷையில் இரண்டாவதாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு வெளி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், M. பிலவேந்திரம் (S. 2) என்பவர் பாடசாலை ஞானோபதேசப் பரீக்ஷையில் முதல் தரமாக தேர்ச்சி பெறும் செக்கண்டரி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், G. சூசைமாணிக்கம் (E. 2) என்பவர் பாடசாலை ஞானோபதேசப் பரீக்ஷையில் முதல்தரமாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், G. S. மரிய அடைக்கலம் (E. 2) என்பவர் பாடசாலை ஞானோபதேசப் பரீக்ஷையில் இரண்டாவதாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், S. ஞானமணி (S. 2) என்பவர் உள்பிள்ளைகளுள் (Boarders) நன்னடத்தையில் சிறந்து விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும், S. R. ராஜகோபாலன் (E 2) என்பவர் வெளிப் பிள்ளைகளுள் (Day Scholars) நன்னடத்தையில் சிறந்து விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், T. C. சுப்பையா (S. 2) என்பவர் 1942-1943-ம் வருஷத்தில் போதனாமுறை பயின்ற சீனியர், ஜூனியர் மாணவர்களுள் "சிறு கதை போட்டி"யில் சிறந்து விளங்குபவருக்கு ஒரு (Silver Cup) வெள்ளிக் கோப்பையும், K. அந்தோனிசாமி (E. 2) என்பவர் நம் பாடசாலையில் பயின்றுவரும் ஆசிரிய மாணவர்களுள் (both grades) முதல்தரமாக தமிழில் சொற்பொழிவு (ex-tempore ...h) நிகழ்த்துபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், T. அலங்கா... ...ன்பவர் இவ்வருஷம் (1943) பாரதியார் தினத்தன்று ...பற்றி போதனாமுறை பயின்றுவரும் ஆசிரிய மாண... ...பாசம் எழுதுபவருக்கு ஒரு வெள்ளிப் பதக் ... என்பவர் தமிழ்ப் பாடத்தில் முதல் ... மாணவருக்கு ஒரு வெள்ளிப்

ம், V. மனுவேல் (E. 2) என்பவர் மனோதத்துவ நூலில் ரமாகத் தேர்ச்சிபெறும் எலிமெண்டரி மாணவருக்கு ஒரு ளிப்பதக்கமும், D. தாமஸ் பொன்னுசாமி (E. 2) என்பவர் மெண்டரி சீனியர் மாணவருக்குள் வகுப்புப் பாட போதனையில் ching Practice) சிறந்து விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் க்கமும், S. மரிய அருள் (E 2) என்பவர் எலிமெண்டரி மாணவ க்குள் கைவேலைப் (Hand work) பாடத்தில் முதன்மையாக ளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், K. C. ஆரோக்கியம் E 2) என்பவர் இவ்வருஷம் நடக்கும் கல்வி கண்காட்சியில் சித்திரத் தில் (Drawing) பழைய புதிய மாணவர்களில் முதன்மையாக தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு ஒரு (Silver Cup) வெள்ளிக்கோப்பை யும், G. சூசைமாணிக்கம் (E 2) என்பவர் இவ்வருஷம் பயின்றுவரும் ஆசிரிய மாணவருள் பாடசாலைக் கண்காட்சியில் சித்திரத்தில் (Drawing) தேர்ச்சி காண்பிக்கும் ஒருவருக்கு ஒரு வெள்ளிப் பதக் கமும், M. டேவிட் ராஜ் (S. 2) என்பவர் பாடசாலைக் கண்காட்சியில் தமிழ்ப் போதனைக்கான உபகரணங்களைத் திறமையுடன் தயாரித்து முதன்மையாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், S. செல் லையா (S. 2) என்பவர் பாடசாலைப்போட்டிப் பந்தய விளையாட்டுக ளில் முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும், M. ஆரோக்கியம் (E. 2) என்பவர் பாடசாலை வைபவ விளையாட்டுக ளுள் கோலூன்றித் தாண்டுதலில் (Pole Vault) முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும், A. ராயர் (E. 2) என்பவர் நம் பாடசாலை விழா நாடகத்தில் திறமையுடன் முதல்தரமாக நடிப்பவர்க்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், A. ஆரோக்கியம் (E. 2) என்பவர் 1943-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் ஏழுக்குக் குறையாமல், அதிகமான பூங்கொத்து சந்தாதார்களைச் சேர்ப்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், இவ்வருஷம் பாடசாலை தின வைபவக் கொண்டாட்டத்தின்போது பரிசளிப்பதாக வாக்குக் கொடுத்துள்ளனர். K. V. பழனிசாமி (E. 2) என்பவர் பழைய மாணவர் வருடாந்தரத் தினத்தன்று நடைபெற விருக்கும் வாய்ப்பாட்டு போட்டியில் (open to old and new boys) முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், K. A. அருளப்பன் (E. 2) என்பவர் மேற்படி போட்டியில் இரண் டாவதாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், A. ராயர் (E. 2) என்பவர் நம் பாடசாலை சாரணர்களுக்குள் திறமை சாரணருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், M. மரிய இரு (E. 2) என்பவர் நம் பாடசாலை சாரணர்களுக்குள் Aid)-ப் போட்டியில் முதன்மையாக விள பதக்கமும், வருகிற வருஷம் கொ வைபவ தினத்தன்று பரிசளி

தாய்ப் பாடசாலை மட்டில் நம் பழைய மாணவர்கள் அபிமானம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு போகின்ற தில் ஐயமில்லை. சென்ற வருஷம் வெள்ளிப் பதக்கப் பரிசுக பழைய மாணவருக்கும், இவ்வருஷம் வெள்ளிப் பதக்கப்பரிசுக பதாக வாக்குக் கொடுத்த மேற்கூறிய நண்பர்களுக்கும் நம் ப மாணவர் சங்கத்தின் சார்பாக எனது மனமார்ந்த வந்தனத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

R. Pitchai,

காரியதரிசி, திருச்சி போதனுமுறைப் பாடசா
பழைய மாணவர் சங்கம்.

திருச்சி திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலை பழைய மாண வர் சங்க ஆண்டுவிழாவன்று ஷெ சங்கப் பொக்கிஷதார் திரு. Y. தூசை மாணிக்கம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு பின்வருமாறு:

கனம், அவைத்தலைவர் அவர்களுக்கும், இச்சங்கத்தின் சங்கைக் குரிய தலைமை சுவாமியார் அவர்களுக்கும், சகோதர ஆசிரியர்களுக் கும், ஆசிரிய மாணவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம்.

இப்பள்ளிக்கூடத்தைச் சார்ந்த பழைய மாணவர்கள் சங்கத்தின் பொக்கிஷதாரென்ற பதவியில் இவ்வமயம் யான் சில சொற்கள் கூற விரும்புகிறேன். இப்பாடசாலையில் ஆண்டுதோறும் பல மாணவ ஆசிரியர்கள் போதனுமுறை பயின்று வெளியேறுகின்றனர். அவ் வாறு, சென்ற பல்லாண்டுகளில் வெளியேறியவர்களும் இப்போது, வெளியேறுபவர்களும் தங்கள் தாய்ப் பாடசாலையின்மாட்டு மாறாத விசுவாசமும் தொடர்பும் உடையவர்களாய் விளங்கிப் பள்ளிக்கூடத் தின் கௌரவத்தையும் தங்கள் கௌரவத்தையும் வளர்ச்சியுறச் செய்யவேண்டுமென்பதே இவ்வுரையின் பொருள். எவ்வாறு? வெளி யேறிய மாணவ ஆசிரியர்கள் தங்கள் ஊழியகாலத்தில் என்றும் இத் தாய்ப்பாடசாலையோடு தொடர்பு நீங்காமல் இருத்தற்குரிய தளை யாது? அஃது திங்கள்தோறும் இப்பாடசாலையினின்றும் மலர்ந்து மணம் வீசி வெளிவரும் போதனுமுறைப் பூங்கொத்து ஆகும். ஒவ் வொரு திங்களும் போதனுமுறை சம்பந்தமான பல அரிய விஷயங் களாகிய நறுமணத்தைக் கிராமங்கள்தோறும் உள்ள கணக்காயர்கள் ...ர்ந்து இன்புறச் செய்வதோடு பழையமாணவர்கள் தங்கள் தாய்ப் ...யையும், பாடசாலையார் பழைய மாணவர்களையும் மறவாமல் ... ஏற்பட்ட ஒரு சாதகமாகும்.

...க்கிரிகையின் இன்றியமையாப் பயனை நன் ...வர்கள் பொருளாதார நெருக்கடி மிக் ...கூரிய ஆண்டு சந்தாவை உயர்த்

முயற்சி குன்றுமலும் பூங்கொத்தை மலரச்செய்வது அவர்க
ள்ளத்தின் வள்ளன்மையையும், கல்வி அபிவிருத்தியின்பால்
டுள்ள பெரும்பற்றையும் எடுத்துக்காட்டுகின்றது. மாணவர்
ால் கொண்டுள்ள மறவாத அன்பினாலும், கல்வியின்மாட்டுக்
ண்டுள்ள ஊக்கத்தாலும் அவர்கள் அளிக்கும் பூங்கொத்தின் நறு
நம் அனைவரும் நுகர வேண்டாமா? அவ்விதழ்களின் வாயிலாக
வர்கள் கூறும் அமிர்தம்போன்ற நல்லுரைகளாகிய நறுந்தேனை
அனைவரும் அருந்தவேண்டாமா?

ஆகவே இப்பாடசாலையின் மாணவர்கள் தாங்கள் வெளியேறி ஊழியம் பெற்றபின் தாங்கள் இன்ன இடத்தில் பயின்றவர்களென்று சொல்லிக்கொண்டால்மட்டும் போதாதென்க. மாணவராயிருக்கையில் தினந்தோறும் பல அரிய விஷயங்களை ஆசிரியர்கள்பால் நேரில் அமர்ந்து கேட்டதுபோன்று, பிற்காலத்தில் தாம் ஊழியம் மேற்கொண்டபிறகும், திங்கள்தோறும் பூங்கொத்தின் வாயிலாகத் தங்கள் ஆசிரியர்களைக் காணலாம். பல நல்லுரைகளைப் படித்தறிந்து அறிவுப் பெருக்கம் பெறலாம் அன்றோ? இஃது பழைய மாணவர்களுக்கும் இத்தாய்ப் பாடசாலைக்கும் தொடர்பு நிலையுற்று விளங்குதற்குரிய கயிறு எனின் பொருத்தமுடைத்து. ஆதலின் அன்புடைய ஆசிரிய சகோதரர்களே, நீங்கள் என்றும் உங்கள் ஊழியகாலத்தில் பூங்கோத்தை வாங்கி ஆதரிப்பது கடமையாகும். இப்பாடசாலையின் மாணவர்கள் நாட்டின் எந்தப்பகுதியில் வேலையிலமர்ந்தாலும், குக்கிராமங்களிலமர்ந்தாலும், பெரிய கிராமத்தில் வாழ்ந்தாலும் அங்கெல்லாம் பூங்கொத்தின் தோற்றத்தை அளிக்கவேண்டும். அதனின்பத்தை ஆசிரியர்கள் தாமும் நுகர்ந்து, மற்றவர்களையும் நுகரச்செய்ய வேண்டும். தாங்களும் விஷயதானம் செய்து பத்திரிகையைப் புஷ்டியுறச் செய்யவேண்டும். ஒவ்வொரு பழையமாணவரும் பூங்கோத்தின் சந்தாதார்களாக என்றும் விளங்கவேண்டும்.

“அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமென்றனர்” ஔவைப் பிராட்டியும். ஈன்ற தாயானவள் உடலை வளர்த்து மனிதனுக்கியது போல், இப்பாடசாலையாகிய தாய் நல்ல போதனாமுறைகளையும், ஆசிரியர் தன்மைகளையும் போதித்து நல்லாசிரியர் துறையில் பிரகாசிப்பதற்கு எற்ற வகையில் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கிறாள். ஆகவே இப்பாடசாலையை நம் வாழ்நாளில் என்றும் மறவாமல் இருக்கவே
டும்.

தாள் உண்ட நீரைத் தலையாலே தருதல்
யென்றவாறு நாம் பள்ளிக்கூடத்தின் வளர்
புரியவேண்டும். போதனாமுறை பயி
தொடர்பு நீங்கிவிட்டது எ
தன்மையாகும். நன்றிம

துறையில் நம்மைப் பயிற்றுவித்த இத்தாய்ப்பாடசாலையை
போற்றி வாழ்த்தவேண்டும். பொதுமக்களும் மாணவர்களும்
டாடும் வகையில் நாம் ஆற்றலும் முறையும் விளங்க ஊழிய
செய்வோமாயின், "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும், தன்ம
சான்றோன் எனக் கேட்ட தாய்", என்றவாறு இப்பாடசாலை
மகிழ்ச்சியுறுவர். அஃது ஒன்றே நாம் இப்பள்ளியின்மாட்டுக் கா
வேண்டிய நன்றிகளில் சாலச் சிறந்ததாகும்.

பயிலும் மாணவ ஆசிரியர்கள் அனைவரும், நல்ல தேர்ச்சிபெறு வகையில் அல்லும் பகலும் 60 நாழிகைகளும், நினைவுடையவராய்த் தம் உடல் பொருள் ஆவி அனைத்தும், இந்த நல்ல பணிக்கே உரிமையாக்கியவராய், முகமலர்ச்சியும், கருணையும் அமைந்து, மடியற்ற உழைப்பு உடையவராய் விளங்கும் சங்கைக்குரிய தலைமை சுவாமியார், லூர்துசாமி அவர்கள் நீடிய ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று நீடூழி வாழ்ந்து சிறப்புறுமாறு தம் கருணையைப் பாலிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

Y. சூசைமாணிக்கம், பொக்கிஷதார்,
பழையமாணவர் சங்கம்,
திருச்சி, திருக்குடும்பப் போதனாமுறைப் பாடசாலை.

கீர்த்தனை

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

பிரார்த்தனை

இராகம் பைரவி 20] [ஆதிதாளம்

(சாஹித்ய கர்த்தா வேதநாயகம் பிள்ளை)

ஸ ரி க ம ப *த நி ஸ்
ஸ் நி த ப ம க ரி ஸ

பல்லவி

மக ரீ ரிக	ஸா ;	ஸா மப்	‖
ம் தரு	வா .	ய் யெனக்	‖
	மக மப	பமகா ரிஸ	‖
	இல். லையென்	மு . . . லும்	‖
		; ;	‖

அநுபல்லவி

பத பம	பநி *தநி	ஸ்ா ஸ்ஸ்	‖
ர மா. கத்து	லங். கும்தெய்	வீ கனே	‖
ஸ் நித பப	மக மப	பமகா ரிஸ	‖
த. தமும் புவி	தாங் கும்நிர்	வா . . . கனே	‖

(இந்த)

சரணங்கள்

ா மம மா மா	ரிக மக	ரிக ஸா	‖
ா யநி மித் தம்	கலங் கினை	யா. மல்	‖
ரிக மக ரிக ரிஸ	கம பம	பா பா	‖
கண். டவர்க் கெல். லாம்	தொண்டு செய்	யா மல்	‖

அநுபல்லவி எடுப்பு :—

மாயப்ர பஞ்சத்தில்	மாட்டிவை	யாமல்	‖
மாதர் கண்ணம். பென்	மனதில்லை	யாமல் (இந்த)	‖

2. எங்கெங்குமே யுன்னு ருவமாய் மின்ன
எண்ணம் வேறின்றி உனே தின முன்ன
மங்கள நாமமென் வாய்நிதம் பன்ன
வார்த்தைகள் யாவுமுன் வார்த்தையாய் மன்ன (இந்த)

3. சுத்த சைதன்னிய நிலைமையில் சார
தோஷ கர்மானு பந்தங்களும் தீர
அத்தனே நித்த முனக்கன்பு கூற
ஆனந்த வீட்டிலே நான்வந்து சேர (இந்த)

4. சூதுபொருமை பொய் கோப மில்லாமல்
சோரமு லோபந் துன்மார்க்கங் கல்லாமல்
வேத நெறியை விலகி நில்லாமற்
வேதநாயகர் விளம்பச் செய்யாமல் (இந்த)

குறிப்பு :—பைரவி இராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—ஷட்ஜமம் சதுச்ருதிரிஷபம். சாதாரணகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சுத்ததைவதம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம். இதன் ஆரோகணத்தில் சதுச்ருதிதைவதமும் அவரோகணத்தில் சுத்ததைவதமும் வரும். மேலே நட்சத்திரக் குறியிட்டிருக்கும் ஸ்வரம் சுத்த தைவதமென்றறியவும்.

OUR EMPLOYMEN BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being every month by thousands of Teachers, hundred Teachers' Associations in addition to the numero Pupil-Teachers in the Training Schools, througho the Tamil-speaking Districts. This is the bes medium of its kind for the advertisement of require ments of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/—from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

WANTED immediately a Catholic Secondary Grade Trained Master to be Headmaster on Rs. 25/- starting. Other particulars in person.

Apply to: **The Parish Priest,**
Catholic Church, Tirupur, **COIMBATORE Dt.**

WANTED immediately a Secondary Grade Trained Mistress on Rs. 25-1-35 with Provident Fund contributions. There are already 6 Mistresses employed in this School. If unmarried the Mistress may remain in the School Hostel.

Apply to: **The Manager,**
Moses Mixed School, Vijayapuram, **TANJORE Dt.**

WANTED immediately a Secondary Grade Trained Master on Rs. 20 plus Rs. 2/- allowance.

Apply to: **The Manager,**
Jothi Kalvi Nilayam, **Fort, ERODE.**

...by Rev. Fr. A. Susai Regis,
...ial School Press, Trichinopoly.